# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.

**CCNo. 1225/2022 PW . 1**

Name : ஆறுமுகம் Fathers Name : கண்ணன்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.05.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் காரைக்குடியில் வசித்து சென்ட்டிரிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது உடன்பிறந்த அண்ணன் ரத்தினம் என்பவர் விபத்தில் இறந்தது சம்பந்தமாக நான் புகார் கொடுத்துள்ளேன். 5 ஆண்டுகளாகிவிட்டதால் தேதி, மாதம், வருடம் நினைவு இல்லை. எனது அண்ணன் ரத்தினமும் ஆஜர் எதிரியும் எங்கள் வீட்டிலிருந்து கோட்டையூருக்கு எதிரிக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்ற போது நாய் குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டதாக எனது நண்பர் தகவல் சொல்லி நான் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது அண்ணனுக்கு தலையிலும், உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது. மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக சிவகங்கைக்கு கொண்டு செல்ல சொன்னார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தோம். 2 நாட்கள் கழித்து அவர் இறந்துவிட்டார். இந்த விபத்திற்கு நான் கேள்விப்பட்டவரையில் நாய் குறுக்கே வந்ததுதான் காரணம். நான் இது தொடர்பாக அளித்த **புகார் அதசாஆ.** 1 ஆகும்.

குறுக்கு விசாரணை:

விபத்து எவ்வாறு நடந்தது என்று நேரடியாக தெரியாது. எனது அண்ணனும் எதிரியும் இருசக்கர வாகனத்தில் சென்ற போது எதிர்பாராத விதமாக நாய் குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நாய் குறுக்கே வந்ததால் பதட்டத்தில் எனது சகோதரர் இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்க முற்பட்டபோது கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்தில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். இருவரும் இருசக்கர வாகனத்தில் மெதுவாகதான்

சென்றார்கள் என்றும் திடீரென நாய் குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்பதாலும், காயம் பட்டவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாலும் என்னிடம் புகார் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை